சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி உதவித்தொகை – 2020–2021 ஆம் கல்வியாண்டில் அரசு / அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு, கோவிட் –19 நோய் தொற்று காலத்தில் வழங்க வேண்டிய உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை புதிய மற்றும் புதுப்பித்தல் மாணாக்கர்களுக்கு வழங்க அனுமதியளித்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–3) துறை

அரசாணை (ப) எண்.71

நாள்: 30.03.2021
சார்வரி வருடம் பங்குனி 17 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது

1. அரசாணை (ப) எண்.125, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 08.12.2011.
2. அரசாணை (ப) எண்.19, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 14.03.2018.
3. ஆதிதிராவிடர் நலம் ஆணையரின் கடிதம் எண். ஜே3/32967/2020, நாள் 05.02.2021.

-----

ஆணை

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விடுதியில் தங்கிப்பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர், ஆதிதிராவிடர் கிருத்துவ மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை இளங்கலை பட்டப்படிப்பு, தொழிற்பயிற்சி படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.6500லிருந்து ரூ.7500/–ம், முதுகலை மற்றும் தொழிற்நுட்ப கல்வி மேற்படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.7000 –லிருந்து ரூ.8000/–ஆகவும் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டத்தினை அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு மட்டும் உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல ஆணையர் கடிதத்தில் 2020–2021 ஆம் கல்வியாண்டில் அரசு / அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு, கோவிட் –19 நோய் தொற்று காலத்தில் வழங்க வேண்டிய உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை புதிய மற்றும் புதுப்பித்தல் மாணாக்கர்களுக்கு வழங்க அனுமதியளித்து அரசாணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று 2020–2021 ஆம் கல்வியாண்டில் அரசு / அரசு உதவிபெறும் கல்வி

..2..

நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு, கோவிட் –19 நோய் தொற்று காலத்தில் வழங்க வேண்டிய உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை வழங்க புதிய மற்றும் புதுப்பித்தல் மாணாக்கர்களுக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி –4–இல் அனுமதியளிக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு, 2020–2021 ஆம் ஆண்டு இறுதி திருத்த மதிப்பீட்டில், கீழ் காணும் கணக்கு தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – KL உயர்கல்வி சிறப்பு படிப்புதவித் தொகை திட்டத்திற்கென ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு நிதியுதவு – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை. IFHRMS 2225–01–277–KL– 30903

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.15994/நிதித் (ஆதி(ம)பந)துறை/2021, நாள் 29.03.2021 –இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு முதன்மைச் செயலாளர், (மு.கூ.பொ)

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–600 005.
இயக்குநர், கல்லூரி கல்வித்துறை,
கல்லூரி சாலை, சென்னை–600 006.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 600 006/18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 600 001/600 005
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அலுவலர்கள்.

நகல்:–
நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–600 009.
உயர் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளரின்
தனிச்செயலர், சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

30/3/2021
பிரிவு அலுவலர்
30/3/2021